# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.102/2018

2025 –ம் ஆண்டு நவம்பர் மாதம் 05 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 05.11.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.இளங்கோவன் (PW–1) | வயது | : | 60 /2025 |
| க/த பெயர் | : | திரு. ராமச்சந்திரன் | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | பரவாக்கோட்டை | வட்டம் | : | மன்னார்குடி |

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) 2 முதல் 5 வரையிலான பிரதிவாதிகள் எனது உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். நான் இந்த வழக்கை தாக்கல் செய்தபோது எனது தகப்பனார் ராமச்சந்திரன் உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். எனக்கும் 2 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளுக்கும் எனது தகப்பனார் சொத்துக்கள் கொடுத்தார் என்றால் சரிதான். எனது தகப்பனார் கொடுத்த சொத்துக்களை தவிர பிற சொத்துக்களை நான் கிரயம் வாங்கினேன் என்றால் சரிதான். நான் கிரயம் வாங்கிய சொத்துக்களை அ , ஆ அயிட்ட தாவா சொத்துக்களாக காண்பித்துள்ளேனா என்றால் இல்லை.
2) என்ன பரிகாரம் வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் அ அயிட்ட தாவா சொத்தில் 1/5 பாக வீதமும், பொதுப்பாதையும் வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். இதர சொத்துக்களை எந்த வருடம் கிரயம் பெற்றேன் என்றால் 2021 இல் எனது மகன் கலைவாணன் பெயரில் 2 மா கிரயம் வாங்கினேன். அந்த சொத்துக்களை தவிர எனது தகப்பனார் 2011 இல் எவ்வளவு சொத்துக்களை எழுதி கொடுத்தார் என்றால் 251 குழி எழுதி

கொடுத்தார். தாவா சொத்துக்களில் அந்த 251 குழியும் வருகிறதா என்றால் இல்லை.

3) 2 முதல் 5 பிரதிவாதிகள் என்மீது இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.83/2018 வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். என்ன பரிகாரத்திற்காக பிரதிவாதிகள் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் பாதை வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். நானும் பாதை வேண்டி தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

4) எனது நிலம் கிணத்திற்கு எந்த திசையில் அமைந்துள்ளது என்றால் வடக்கு பகுதியில் அமைந்துள்ளது. கிணத்திற்கு அடுத்து மதியழகன் நிலமும் அதனை தொடர்ந்து எனது இடமும் அமைந்துள்ளது என்றால் சரிதான். எந்த பகுதியில் நான் பாதை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது வீட்டிலிருந்து கீழ்புறமாக பாதை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் எனது வீட்டிலிருந்து தென்புறத்தில் பாதை காண்பித்துள்ளேன் என்றால் சரியல்ல.

5) எனது தகப்பனார் எனக்கு எழுதிக் கொடுத்த 17 செண்ட் நிலத்தில் வீடு கட்டியுள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்கின்ற பாதை எனது வீட்டிற்கு தென்புறம் உள்ளது என்றால் இல்லை. எனது வீட்டிற்கு தென்புறம் உள்ள எனது அப்பாவிற்கு உள்ள சொத்தினை அவரது பேரப்பிள்ளைகளுக்கு உயில் ஆவணம் மூலம் எழுதி கொடுத்தார் என்றால் கேள்விப்பட்டுள்ளேன்.

**பிரதிவாதியின் கற்றறிந்த வழக்கறிஞர் மேலும் சில ஆவணங்கள் குறித்து சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய கால அவகாசம் வேண்டுமென கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.11.07 18:58:43 +0530

District Munsif
Mannargudi.